வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி-12.7.2026 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, நியுசிலாந்து ஆகிய 3 நாடுகள் பயணத்தை முடித்துக் கொண்டு இன்று புதுடெல்லி திரும்பினார்.

மறைந்த திரைப்பட பின்னணிப் பாடகி எஸ் ஜானகியின் இறுதிச் சடங்குகள் முழு அரசு மரியாதையுடன் இன்று மாலை மைசூரில் நடைபெற்றன.

சமூக சீர்திருத்தவாதியும் சுதந்திரப் போராட்ட வீரருமான மன்னத்து பத்மநாபனின் சிலையை குடியரசு துணைத் தலைவர் திரு சிபி ராதாகிருஷ்ணன் இன்று திறந்து வைத்தார்.

அஹமதாபாத்தில் 405 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப்பணிகளுக்கு இன்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா அடிக்கல் நாட்டினார்.

மோடி

பிரதமர் திரு நரேந்திர மோடி, இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, நியுசிலாந்து ஆகிய 3 நாடுகள் பயணத்தை முடித்துக் கொண்டு இன்று புதுடெல்லி திரும்பினார். 6 நாள் பயணத்தின் போது முதலில் இந்தோனேசியா சென்ற பிரதமர் திரு மோடி, அந்நாட்டு அதிபர் திரு Prabowo Subianto-உடன் இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து கலந்துரையாடினார். பின்னர் 2-ஆம் கட்டமாக ஆஸ்திரேலியா சென்ற பிரதமர், அந்நாட்டு பிரதமர் திரு Anthony Albanese-உடன் ஆலோசனை நடத்தினார். பின்னர் அங்கு நடைபெற்ற வருடாந்திர உச்சி மாநாட்டில் பங்கேற்று முன்னணி தொழில் துறை தலைவர்கள் கூட்டத்தில் உரையாற்றினார். நேற்று முன் தினம் நியுசிலாந்து சென்ற அவர் அந்நாட்டு பிரதமர் திரு Christopher Luxon-உடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு வார்த்தை நடத்தினார்.

இந்திய பெருங்கடல்பரப்பு மற்றும் இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில், இந்தியா முன்னணி நாடாக விளங்குவதாக பிரதமர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக டெல்லியில் செய்தியாளர்களுடன் பேசிய பிஜேபி செய்தித் தொடர்பாளர் திரு. Sambit Patra, ஆஸ்திரேலியா மற்றும் இந்தோனேசியாவிற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்ட பயணம் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த உதவியுள்ளதாக தெரிவித்தார். இந்தியா - நியூசிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், பொருளாதாரத்தில் முக்கிய மைல்கல் என அவர் தெரிவித்தார்.

ஜானகி-இசை

மறைந்த திரைப்பட பின்னணிப் பாடகி எஸ் ஜானகியின் இறுதிச் சடங்குகள் முழு அரசு மரியாதையுடன் இன்று மாலை மைசூரில் நடைபெற்றன. எண்ணற்ற அரசியல் பிரமுகர்கள் அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

இதுகுறித்த செய்தி தொகுப்பு............

(வாய்ஸ்)

பின்னணி இசை பாடகி எஸ் .ஜானகி உடல் நலக் குறைவால் நேற்று அதிகாலை மைசூர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தார். மைசூர் மகாராஜா கல்லூரி மைதானத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு ஆயிர கண்கானோர் அஞ்சலி செலுத்தினர். 1938-ஆம் ஆண்டு ஏப்ரல் 23-ஆம் தேதி பிறந்த எஸ் ஜானகி தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் 48 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை பாடி உள்ளார். 4 தேசிய விருதுகள், தமிழகம், கேரளம், கர்நாடகா, ஆந்திர மாநிலங்களின் விருதுகள் உட்பட 33 விருதுகளை அவர் பெற்றுள்ளார்.

எஸ். ஜானகியின் மறைவிற்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல். முருகன், தமிழக முதலமைச்சர் திரு. விஜய், புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி உள்ளிட்ட பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில், பின்னணி பாடகி எஸ். ஜானகியின் மறைவு இசையுலகிற்கு பேரிழப்பு என தெரிவித்துள்ளார். மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல். முருகன்

வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பல மொழிகளில் ஆயிரக்கணக்கான பாடல்களை பாடியுள்ள எஸ். ஜானகி, தனது இனிமையான குரலாலும், உணர்வுப்பூர்வமான இசை வெளிப்பாட்டாலும், பல தலைமுறையினரின் இதயங்களில் நீங்கா இடம் பிடித்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

எஸ். ஜானகியின் மறைவு இந்திய திரைப்பட இசையுலகிற்கு பேரிழப்பு என இசையமைப்பாளர் திரு. இளையராஜா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பின்னணி பாடகி எஸ் ஜானகியின் மறைவு இந்திய இசைத் துறைக்கும், கலை உலகிற்கும், ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என்றும் அவரது குரல் மற்றும் காலத்தால் அழியாத பாடல்கள் என்றும் இசை ரசிகர்களின் நினைவில் நீங்காமல் இருக்கும் என்றும் புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

பியூஷ் கோயல்

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், நாளை முதல் வரும் 17 ஆம் தேதி வரை ஸ்பெயின், பெல்ஜியம் மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகளுக்கு இந்திய உயர்மட்ட வர்த்தகக் குழுவிற்குத் தலைமை தாங்கிச் செல்கிறார். வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், புத்தாக்கம் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்தி, ஐரோப்பாவுடனான இந்தியாவின் பொருளாதாரக் கூட்டாண்மைகளை வலுப்படுத்துவதே இந்தப் பயணத்தின் நோக்கம் என்று வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தமது பயணத்தின் முதல் கட்டமாக, திரு. கோயல் நாளை ஸ்பெயினுக்குச் செல்கிறார். அங்கு நடைபெறும் வர்த்தக வட்டமேசை மாநாட்டில் அவர் பங்கேற்பார். இந்த அமர்வு, வாகனத் துறை, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், ரயில்வே, செயற்கை நுண்ணறிவு, குறைக்கடத்திகள், உணவு பதப்படுத்துதல் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் உள்ள வாய்ப்புகளை ஆராய்வதற்காக ஸ்பெயின் மற்றும் இந்தியத் தொழில்துறைத் தலைவர்களை ஒருங்கிணைக்கும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஏமன்

இந்தியர்கள் ஏமன் நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை வெளியுறவு அமைச்சகம் தளர்த்திக் கொண்டுள்ளது. ஏமனில் உள்நாட்டுக் கலவரம் ஏற்பட்ட நிலையில், கடந்த

2017ஆம் ஆண்டு பயணிகள் அங்கு செல்வதற்கு வெளியுறவு அமைச்சகம் சில கட்டுப்பாடுகளை விதித்தது. அங்கு நிலவும் பாதுகாப்பு சூழலை கருத்தில் கொண்டு, பயணிகள் அங்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. அத்தியாவசியமற்ற பயணத்தை தவிர்க்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டது. தற்போது, ஏமன் நாட்டில் நிலைமை மேம்பட்டுள்ளதை அடுத்து, அங்கு செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ராதாகிருஷ்ணன்

நாட்டின் சமூக சீர்திருத்தவாதிகளின் மகத்தான பாரம்பரியத்தை மதித்து, அதைப் பேணிப் பாதுகாப்பது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி. பி. ராதாகிருஷ்ணன் இன்று வலியுறுத்தினார். புதுடெல்லி, துவாரகாவில் உள்ள **மன்னம் சர்வதேச** மையத்தில், சமூக சீர்திருத்தவாதியும் சுதந்திரப் போராட்ட வீரருமான மன்னத்து பத்மநாபனின் சிலை மற்றும் மன்னம் ஸ்மிருதி மண்டபத்தைத் திரு. ராதாகிருஷ்ணன் திறந்து வைத்து பேசினார்.

அவர் உரை குறித்த கூடுதல் தகவல்கள்..........

(வாய்ஸ்)

சமூக நீதி, சமத்துவம், கல்வி மற்றும் சமூக சேவைக்காக மன்னத்து பத்மநாபன் வாழ்நாள் முழுவதும் கொண்டிருந்த அர்ப்பணிப்பை திரு சிபி ராதாகிருஷ்ணன் எடுத்துரைத்தார். அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நல்லிணக்கமான சமுதாயத்தை உருவாக்கும் தேசத்தின் பயணத்தில், **மன்னத்து பத்மநாபனின் கொள்கைகள்** தொடர்ந்து ஊக்கமளிக்கின்றன என்று அவர் கூறினார்.

நவீன இந்தியாவின் தலைசிறந்த சமூக சீர்திருத்தவாதிகளில் ஒருவராக மன்னத்து பத்மநாபனை வர்ணித்த திரு. ராதாகிருஷ்ணன், கல்வி, சமூக சீர்திருத்தம், சுயசார்பு மற்றும் சமூக சேவை ஆகியவற்றின் மூலம் சமூகத்தின் மேம்பாட்டிற்காக அவரது வாழ்க்கை அர்ப்பணிக்கப்பட்டது என்று கூறினார். மகாத்மா காந்தியுடன் இணைந்து, சமூக ரீதியாக நலிந்தவர்களின் நலனுக்காகப் போராடுவதில் மன்னத்து பத்மநாபன் ஒரு முக்கியப் பங்காற்றினார் என்று அவர் குறிப்பிட்டார். வரலாற்றுச் சிறப்புமிக்க வைக்கம் சத்தியாகிரகத்தில் அவரது தீவிரப் பங்களிப்பை எடுத்துரைத்த திரு. ராதாகிருஷ்ணன், அதனை இந்தியாவின் சமூக சீர்திருத்த இயக்கத்தின் வரையறுக்கும் அத்தியாயங்களில் ஒன்றாக விவரித்தார்.

அமித்ஷா

நாட்டில் பசுமை பரப்பை அதிகரித்து எதிர்கால சந்ததியினருக்கு ஏற்ற வாழ்விட சூழல் உறுதி செய்யப்பட வேண்டுமென்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார். அஹமதாபாத்தில் 405 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப்பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டி பேசிய அவர், வீடுகளில் சூரிய மின் சக்தி அமைப்புகளை நிறுவ வேண்டுமென வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தின் கீழ் பருவநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்ளும் வகையில் 1.25 கோடிக்கும் அதிகமான மரக்கன்றுகள் நடும் மாபெரும் இயக்கத்தையும் திரு அமித்ஷா தொடக்கி வைத்தார்.

கத்தார்

கத்தார் நாட்டு முன்னாள் இளவரசர் ஷேக் ஹமத் பின் கலீஃபா அல்தானி மறைவிற்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி இரங்கல் தெரிவித்துள்ளார். தமது சமூக வலைதள பதிவில் பிரதமர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், தொலைநோக்கு பார்வையுடன் அந்நாட்டின் வளர்ச்சிக்கு துணைநின்றவர் என குறிப்பிட்டுள்ளார்.

வருங்கால வைப்பு நிதி

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு விலக்களிக்கப்பட்ட வருங்கால வைப்பு நிதி முறையை செயல்படுத்தும் நிறுவனங்கள் தங்களது நிலையை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் பொது சலுகை திட்டம் 2026-ஐ அறிமுகப்படுத்தி உள்ளது. இத்திட்டம் அடுத்த 6 மாத காலத்திற்கு செயல்பாட்டில் இருக்கும் என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த 1961-ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட வருங்கால வைப்பு நிதி அறக்கட்டளையை நிர்வகித்து வரும் நிறுவனங்களுக்கு இத்திட்டம் பொருந்தும் என்று கூறப்பட்டுள்ளது. தகுதி உடைய நிறுவனங்கள் இணையதளம் வாயிலாக அந்தந்த மண்டல அலுவலகத்தை தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு அமைச்சகம் அறிவித்துள்ளது.

உணவு பாதுகாப்பு மற்றும் தர நிலைகள் சட்டம் 2026-ன் விதிகளை மீறியதாக நுகர்வோரிடமிருந்து பெறப்பட்ட புகார்களை அடுத்து ஸ்விக்கி,

இன்ஸ்டாமார்ட் நிறுவனத்திற்கு இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையம் ஒன்பது பிரிவுகளில் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இது குறித்து ஆணையம் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் சம்பந்தப்பட்ட உணவு வணிக நிறுவனம் விரிவான விளக்கம் அளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மீறினால் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது.

முத்ரா

பிரதமரின் முத்ரா கடன்திட்டத்தின் கீழ் 5 லட்சம் ரூபாய் வரை கடன் பெற, செயல்முறை கட்டணமாக 350 ரூபாய் செலுத்தக்கூறும் போலி ஒப்புதல் கடிதம் குறித்து பரவும்  செய்திகளை மத்திய பத்திரிக்கை தகவல் அலுவலக உண்மை சரிபார்ப்பு பிரிவு நிராகரித்துள்ளது.  முத்ரா நிறுவனம் சிறு தொழில்முனைவோர் அல்லது தனிநபர்களுக்கு நேரடியாக கடன் வழங்குவதில்லை என்றும் தெளிவுபடுத்தியுள்ளது. இத்தகைய செய்திகளின் அடிப்படையில் பொதுமக்கள் பணம் அனுப்புவதையோ அல்லது தனிப்பட்ட மற்றும் வங்கி விவரங்களை பகிர்ந்து கொள்வதையோ தவிர்க்குமாறு பொது மக்களை அறிவுறுத்தி உள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, நியுசிலாந்து ஆகிய  3 நாடுகள் பயணத்தை முடித்துக் கொண்டு இன்று புதுடெல்லி திரும்பினார்.

மறைந்த திரைப்பட பின்னணிப் பாடகி எஸ் ஜானகியின் இறுதிச் சடங்குகள் முழு அரசு மரியாதையுடன்  இன்று மாலை மைசூரில் நடைபெற்றன.

சமூக சீர்திருத்தவாதியும் சுதந்திரப் போராட்ட வீரருமான மன்னத்து பத்மநாபனின் சிலையை குடியரசு துணைத் தலைவர் திரு   சிபி ராதாகிருஷ்ணன் இன்று திறந்து வைத்தார்.

அஹமதாபாத்தில் 405 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப்பணிகளுக்கு இன்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா அடிக்கல் நாட்டினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/12.7.2026/Script.

----------------------------